தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
5th Term Examination - 2022

கணக்கீடு I Accounts I	Two Hours Gr -13 (2022)	33	T	I

அறிவுறுத்தல்கள்:-
- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.*
- *31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.*

சுட்டெண் :....................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 – 30	
31 - 50	
மொத்தம்	

பகுதி – I

1) பின்வருவனவற்றுள் எது நிதிக்கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிக சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.?
   1) கொடுக்கல் வாங்கல்களை ஏடுகளில் முறையாக பதிவுசெய்தல்.
   2) நிறுவன செயற்திறனை மதிப்பிடல்
   3) சட்டத் தேவையை பூர்த்தி செய்ய உதவுதல்
   4) தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான பயனுள்ள தகவல்களை அக்கறையுடைய தரப்பினருக்கு வழங்கல்
   5) வளங்களை சிறப்பாக முகாமை செய்ய உதவுதல் (…….)

2) பின்வருவன கணக்கீட்டு அலகில் அக்கறை செலுத்தும் தரப்பும் அக்கறையிடுவதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளது பொருத்தமான காரணத்திற்கமைய சரியான தரப்பினரை வரிசைப்படுத்துக.

	காரணம்	தரப்பினர்
01	நுகர்வோர் நலனை பாதுகாத்தல்	A – முதலீட்டாளர்
02	நிறுவன நோக்கத்தை அடைய செய்தல்	B – ஊழியர்
03	வட்டிக்கான பாதுகாப்பு இயலுமை	C – அரசு
04	முதலுக்கான பாதுகாப்பு	D – முகாமையாளர்
05	தொழில் பாதுகாப்பு	E – கடன் வழங்குநர்

1) DEACB 2) ACDEB 3) BACDE
4) CBEAD 5) CDEAB (…...)

- பாபூஜி என்பவர் 1.1.2022இல் புடைவை வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இது VAT க்கு பதியப்பட்ட நிறுவனமாகும். ஜனவரி முதல் மாத தகவல்கள் வருமாறு

	ரூ 000
1.1 மூலதனம் இட்டது	500
2.1 மாதம் ரூ 5000 வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு செலுத்திய ஒரு வருட வாடகை	60
15.1 15% VAT உட்பட புடைவை கடன் கொள்வனவு	230
20.1 இம்மாத கொள்வனவு முழுவது 15% VAT உட்பட காசுக்கு விற்கப்பட்டது	345
25.1 செலுத்திய பெறுமதி சேர் வரி	10

மேற்படி தகவல்களை அடிப்படையாக கொண்டு 3ம், 4ம், 5ம் வினாக்களுக்கு விடை தருக

3) 1.1 தொடக்கம் 20.1 வரையான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு பொருத்தமான மூல ஆவணங்களின் வரிசை எது?

1) பற்றுச்சீட்டு , கொடுப்பனவு கைச்சாத்து , நாட்குறிப்பு கைச்சாத்து, பற்றுச்சீட்டு
2) பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து , நாட்குறிப்பு கைச்சாத்து, விற்பனைப்பட்டியல்
3) பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து , கொள்வனவுப் பட்டியல், பற்றுச்சீட்டு
4) நாட்குறிப்பு கைச்சாத்து, பற்றுச்சீட்டு , கைச்சாத்து , நாட்குறிப்பு கைச்சாத்து
5) பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து, பற்றுச்சீட்டு ,கொடுப்பனவு கைச்சாத்து (…….)

4) மேற்படி கொடுக்கல் வாங்கல் காரணமாக 31.1.2022 இல் கணக்கீட்டுச் சமன்பாட்டின் இறுதி தேறிய தாக்கம் யாது? (VAT கட்டுப்பாட்டு கணக்கை பொறுப்பில் உள்ளடக்குக)

	சொத்து 000	உரிமையாண்மை 000	பொறுப்பு 000
1)	830	585	245
2)	775	540	235
3)	830	595	235
4)	785	595	290
5)	775	595	180

(…….)

5) 2022 ஜனவரி மாதத்திற்கதான நிறுவனத்தின் மொத்தலாபமும் தேறியலாபமும் யாது?

	மொத்தலாபம் (ரூ 000)	தேறியலாபம் (ரூ 000)
1)	115	55
2)	100	95
3)	100	40
4)	115	45
5)	100	30

(…....)

6) நிறுவனமொன்றின் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு இதனை சரியான முறையில் ஒழுற்கு வரிசைப்படுத்துக.

A – நாட்குறிப்பு கைச்சாத்து தயாரித்தல்
B – கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிதல்
C – நிதி நிலைமைக்கூற்றுக்கு எடுத்துவரல்
D – கடன்பட்டோரிடம் பெறப்பட்ட காசோலை மறுக்கப்படல்
E – பொது நாட்குறிப்பேட்டில் பதிதல்

1) ADECB 2) BCADE 3) DACEB 4) AEBDC 5) DAEBC (…….)

7) கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சரியான இரட்டைப் பதிவையும், விளைவையும் கொண்ட சரியான தொடரை தெரிவு செய்க.

நடவடிக்கை	பேரேட்டு கணக்கு	இரட்டைப் பதிவு	இரட்டை விளைவு
A – கடன்கொள்வனவு	கடன்கொடுநர்	வரவு	அதிகரிப்பு
B – உட்திரும்பல்	கடன்பட்டோன்	செலவு	குறைவு
C – விதித்தவட்டி	கடன்பட்டோன்	வரவு	அதிகரிப்பு
D – பொருள்பற்று	பற்று	செலவு	குறைவு

1) ABD 2) AD 3) ACB 4) BC 5) AB (…….)

- பந்துல என்பவரது 1.4.2022 இல் உள்ள காசுக்கட்டுப்பாட்டு கணக்குமீதியும் வங்கிக்கூற்றுமீதியும் வேறுபட்டது இதற்கு ஒரேஒரு காரணம் சென்றமாத மாற்றப்படாத காசோலை ரூ 20000 ஆகும் 1.4.2022 இல் வங்கிக் கூற்று மீதி ரூ 92000 ஆகும். 2022 ஏப்பிரல் மாத தகவல்கள் வருமாறு.

5.4 கடன் விற்பனை ரூ 40000 இதன் கிரயம் ரூ 30000
10.4 காசோலை மூலம்கொள்வனவு ரூ 25000
15.4 ஏப்பிரல் மாதத்திற்கு காசோலை மூலம் செலுத்திய சம்பளம் ரூ 12000
20.4 கடன்பட்டோனால் திருப்பியது ரூ 8000 இதன் கிரயம் ரூ 6000
(இவை 5.4 இல் விற்கப்பட்டவை)
28.4 கடன்பட்டோரிடமிருந்து ரூ 2000 கழிவுதள்ளி ரூ 18000 காசோலை பெறப்பட்டது

சென்ற மாத மாற்றப்படாத காசோலைகளில் ரூ 15000 மாத்திரம் ஏப்பிரல் மாதம் வங்கியில்கொடுத்து பணமாக்கப்பட்டது மிகுதி தொடர்ந்தும் மாற்றப்படாதுள்ளது இம் மாதம் கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை 30.4 வரை வங்கியால் வசூழிக்கப்படவில்லை.

ஏப்பிரல் மாதத்திற்கான வங்கிக்கட்டனம் ரூ 2000 ஏப்பிரல்மாத நிலையியற்கட்டளை வாடகை ரூ 3000 ஏப்பிரல் மாத கடன் விற்பனை சார்பாக பெறப்படவேண்டிய மிகுதி நேரடியாக வங்கிக்கு அனுப்பப்பட்டது

- **8ம், 9ம் , 10ம் வினாக்களுக்கு விடை தருக**

8) ஏப்பிரல் மாதத்திற்கான திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி என்ன?
1) ரூ 68000 2) ரூ 88000 3) ரூ 80000 4) ரூ 60000 5) ரூ 62000 (…….)

9) ஏப்பிரல் மாத வங்கிக்கூற்று மீதி என்ன ?
1) ரூ 47000 2) ரூ 37000 3) ரூ 42000 4) ரூ 55000 5) ரூ 50000 (…….)

10) ஏப்பிரல் மாத வருமானம் செலவினம் யாது?

	வருமானம்	செலவு
1)	40000	49000
2)	32000	43000
3)	32000	49000
4)	32000	41000
5)	44000	49000

(…….)

11) வரையறுத்த றோபோ கம்பனியின் கடன்பட்டோர் சார்பாக இடம்பெற்ற பிழைகள் வருமாறு.
- கொடுத்த கழிவு ரூ 2100 காசுப்பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரலில் ரூ 1200 என பதியப்பட்டது
- மறுக்கப்பட்ட காசோலை ரூ 3000 கடன்பட்டோன் போரேட்டில் ரூ 300 என பதியப்பட்டது.
- உட்திரும்பல் நாளேடு ரூ 2000 கூட்டிக்கூட்டப்பட்டது.

மேற்படி பிழைகள் திருத்தப்படின் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கும் பேரேட்டுப்பட்டியலிலும் ஏற்படும் தேறிய தாக்கம் யாது?

	கட்டுப்பாட்டு கணக்கு	பேரேட்டுப்பட்டியல்
1)	ரூ 2000 அதிகரிக்கும்	ரூ 1800 அதிகரிக்கும்
2)	ரூ 1100 அதிகரிக்கும்	ரூ 1100 குறையும்
3)	ரூ 1100 அதிகரிக்கும்	ரூ 1100 அதிகரிக்கும்
4)	ரூ 1100 அதிகரிக்கும்	ரூ 1800 அதிகரிக்கும்
5)	ரூ 3800 அதிகரிக்கும்	ரூ 2900 அதிகரிக்கும்

(…….)

12) பின்வரும் கூற்றுக்களில் எவை பாதுகாப்பு எண்ணக்கருவுடன் உடன்படுகின்றது என்பதை குறிப்பிடுக.

A - இருப்புக்கள் அவற்றின் கிரயப் பெறுமதியைவிட அதன் கைத்தேறத்தக்க பெறுமதி குறைத்தெழுதப்பட்டிருந்தது.

B – நிறுவனத்திற்கு எதிராக வாடிக்கையாளரால் நட்டஈடுகோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக ஏற்பாடு செய்தல்

C – விற்கத்தயாரான பொருளின் கிரயத்திலிருந்து இறுதி இருப்பானது கழித்துக் காட்டப்பட்டது.

1) A யும் B யும் 2) ABC ஆகியன 3) B யும், C யும்

4) A யும், C யும் 5) B மட்டும் (…….)

- 1.4.2021 இல்ஆரம்பிக்கப்பட்ட சேது நிறுவனம் கபில் , விமல் எனும் இரு ஊழியர்களை இத்தினத்தல் வேலைக்கு நியமித்து மாதாந்தம் தேறிய சம்பளமாக முறையே ரூ 36000, ரூ 54000 மாதாந்தமாக செலுத்துகின்றது. ஊழியர் சேமலாபநிதியத்திற்கு (EPF) ஊழியர் 10% மும், தொழில்கொள்வோன் 15% மும் பங்களிப்பு செய்கின்றனர். ஊழியர் நம்பிக்கை (ETF) ஒவ்வொரு மாதமும் தொழில் கொள்வோன் 5% பங்களிப்பு செய்கின்றார். EPF. ETF பங்களிப்பும் உரிய அமைப்புக்களுக்கு அதனைத்தொடர்ந்து வரும் மாதமே அனுப்பப்படும்.
- **13ம் 14ம் வினாக்களுக்கு விடை தருக.**

13) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்தச்சம்பளமும், ஊழியர் சார்பான மொத்தச் செலவும் யாது?

	மொத்தச் சம்பளம் ரூ 000	ஊழியர்சார்பான மொத்தச் செலவு ரூ 000
1)	1200	240
2)	1200	1440
3)	1200	360
4)	1200	1560
5)	1180	360

(…….)

14) 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான EPF செலவும், 31.3.2022 ஊழியர் சார்பான சென்மதியும் யாது?

	EPF செலவு	31.3.2022 ஊழியர் சர்பான சென்மதி
1)	180 000	54000
2)	300 000	90000
3)	240 000	24000
4)	180 000	30000
5)	120 000	30000

(…….)

15) சக்கி விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் 1.4.2021 இல் உரிமையாண்மை தொடர்பான மீதிகள் வருமாறு.

ஆயுள் அங்கத்தவ சந்தா ரூ 1800
விளையாட்டு உபகரண நிதி ரூ 2200
திரண்ட நிதி ரூ 5000

31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மிகை ரூ 3000 விளையாட்டு உபகரண நிதியை பயன்படுத்தி ரூ 1800 பெறுமதியான விளையாட்டு உபகரணம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. பயன்படுத்தப்பட்ட விளையாட்டு உபகரண நிதியை ஆண்டுக்கான வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கை ஆயுள் அங்கத்தவ சந்தா இணைந்து கொள்ப்பட்டதிலிருந்து 10 வருட வருமானமாக பகிர்ந்தளிக்கப்படும் ஆயுள் அங்கத்தவர்கள் 1.4.2020 இல் இணைந்து கொண்டனா. 31.3.2022 இல் உரிமையாண்மை யாது?

1) ரூ 9000 2) 10 000 3) ரூ 8000 4) ரூ 12000 5) ரூ 14000 (…….)

- ஒரு பங்குடைமையில் சுசில், பசில், சிசில் என்போர் இலாபநட்டங்களை 5:3:2 என பகிரும் பங்காளர்கள் 1.4.2021 இல் பசில் இளைப்பாற சுசிலும், சிசிலும் இலாபநட்டங்களை 3:2 என பகிர்ந்து கொண்டு பங்குடைமையை தொடர்ந்தனர். புதிய பங்குடைமை உடன்படிக்கைக்கமைய பங்காளர் இறுதி மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டியும் சுசிலுக்கும், சிசிலுக்கும் ஆண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 250 000, ரூ 300 000 வழங்கப்படவேண்டம். சுசிலும் சிசிலும் முறையே ஆண்டுகாலத்தில்

  ரூ 100 000, ரூ 50 000 தொகையை காசாக பற்றியிருந்தனர். 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சுசிலுக்கும், சிசிலுக்கும் முறையே இறுதி இலாப பங்காக முறையே ரூ 300 000, ரூ 200 000 வழங்கப்படும்.

  பங்காளரது மூலதன நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு

	1.4.2021 மூலதனம்	1.4.2021 இல் நடைமுறை கணக்கு	31.3.2022 இல் நடைமுறைக்கணக்கு
	ரூ 000	ரூ 000	ரூ 000
சுசில்	4000	250 (செலவு)	1090 (செலவு)
பசில்	3000	100 வரவு	-
சிசில்	2000	300 செலவு	930 (செலவு)

16ம், 17ம், 18ம் வினாக்களுக்கு விடை தருக.

16) பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு யாது?

1) ரூ 300 000 2) ரூ 500 000 3) ரூ 1000 000 4) ரூ 200 000 5) ரூ 2000 000 (…….)

17) இப் பங்குடைமையின் 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறியலாபம் யாது?

1) ரூ 500 000 2) ரூ 1120 000 3) ரூ 1070 000
4) ரூ 1050 000 5) ரூ 1620 000 (…….)

18) 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டில் பங்குடைமையின் உரிமையாண்மையில் ஏற்பட்ட குறைவு யாது?

1) ரூ 1580 000 2) ரூ 1630 000 3) ரூ 1230 000
4) ரூ 1470 000 5) ரூ 1730 000 (…….)

19) சமந்தி பொதுக்கம்பனியின் 31.3.2022 இல் முடிவடைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கு 28.5.2022 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன 31.3.2022 பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு.

A – 28.4.2022 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ 50000 பண்டங்கள் 19.5.2022 இல் ரூ 46000 இற்கு விற்கப்பட்டது

B - 22.05.2022 ஏற்பட்ட தீ விபத்தில் ரூ 400 000 பொறி இயந்திரம் தீயினால் அழிக்கப்பட்டது.

C – நிறுவனத்திற்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவரால் 29.3.2022 இல் தாக்ல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் ரூ 500000 இழப்பீடு வழங்கவேண்டும் என 25.5.2022 தீர்ப்பு கிடைக்கப்பெற்றது

D – 31.3.2022 இல் ரூ 200000 மீதியாகவுள்ள கடன்பட்டோர் 21.5.2022 இல் முறிவடைந்தார்.

LKAS 10 இன்படி 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க **தேவையான நிகழ்வுகள்** எவை,

1) ABC 2) ACD 3) AC 4) CD 5) ABCD (…….)

20) வரையறுத்த சாயி கம்பனியின் 2022 ஜனவரி மாத இருப்பு தொடர்பான தகவல்கள் வருமாறு.

திகதி	அலகுகள்	கொள்வனவு கிரயம் (ரூபா)	விற்பனைக்கிரயம் ரூபா	இருப்பின் கிரயம் ரூபா
3.1	600	7200	-	?
12.1	400	3600	-	?
20.1	?	-	**A**	2160
31.1	500	7500	-	**B**

நிறையளித்த சராசாரி (**WAC**) முறையில் இருப்பு மதிப்பிடப்படுகின்றது என கருதி **LKAS** 02 படி **A**, **B** ஆகிய எழுத்துக்களில் முறையே தோன்றக்கூடிய பெறுமதிகள் யாது?

1) ரூ 8640, ரூ 7500 2) ரூ 8640, ரூ 9660 3) ரூ 10800, ரூ 9660
4) ரூ 9680 , ரூ 7480 5) ரூ 8640 ரூ 2160 (…….)

- வரையறுத்த ராயு கம்பனி பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். 1.4.2018 இல் 15% VAT உட்பட ரூ 575000 விலையில் பொறியொன்றை கொள்வனவு செய்தது. பொறியின் ஆயுட்காலம் 12 வருடம், இழிவுப்பெறுமதி
  ரூ 100 000 1.4.2018 இல் இதன் ஆரம்பக் கிரயங்கள் வருமாறு
  நிறுவுதல் கட்டனம் ரூ 80 000
  முற்பரிசோதனைக் கட்டனம் ரூ 40 000
  பொறியை இயக்குவதற்கான புதிய மின்இணைப்புக் கட்டனம் ரூ 80 000
  1.4.2021 இல் பிற்காலத்தில் ஏற்பட்ட கிரயங்கள் வருமாறு
  பொறிக்கான புதிய கருவி பொருத்தும் செலவு ரூ 120 000
  பொறி பழுதுபார்த்தல் செலவு ரூ 30 000
  கருவி பொருத்தப்பட்டதால் 1.4.2021 இருந்து இதன் எஞ்சிய பயன்பாட்டு ஆயுட்காலம் 10 வருடங்காளாக உயர்வடைந்தது. அத்துடன் இதன் இழிவுப்பெறுமதி மேலும் ரூ 20 000 ஆல் அதிகரித்தது.

- **21, 22 ம் வினாக்களுக்கு விடை தருக.**

21) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பொறி பெறுமானத் தேய்வு யாது?
1) ரூ 49 000 2) ரூ 74 000 3) ரூ 57 000
4) ரூ 55 000 5) ரூ 70 000 (…….)

22) 31.3.2022 இல் பொறியின் முன்கொண்டுவரும் பெறுமதி யாது?
1) ரூ 480 000 2) ரூ 495 000 3) ரூ 615 000
4) ரூ 600 000 5) ரூ 613 000 (…….)

- வரையறுத்த சயிபோ கம்பனி மோட்டார் சைக்கில்களை விற்பனை செய்கின்றது இக் கம்பனி மோட்டார் சைக்கில்களை விற்பனை செய்வதுற்கும் அதற்கான பராமரிப் சேவையை செய்வதற்குமான ஒப்பந்தம் ஒன்றில் 1.1.2022 இல் கைச்சாத்திட்டு கைமாற்று தொகையாக ரூ 200 000 ஐ பெற்றுக்கொண்டது. மோட்டார் சைக்கிளின் விற்பனை விலை ரூ 180 000, பராமரிப்பு சேவை வருமானம் ரூ 60 000 இப் பராமரிப்பு சேவை வருமானம் 5 தடவைகளுக்குரியது ஒவ்வொரு பராமரிப்பு சேவையும் ஒவ்வொரு காலாண்டு இறுதியில் மேற்கொள்ளப்படும் முதலாவது பராமரிப்பு சேவை 31.3.2022 இல் இடம்பெற்றது. ஒப்பந்த திகதியில் பொருள் பரிமாற்றப்பட்டது.

- **23, 24 ம் வினாக்களுக்கு விடை தருக**

23) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்காக கம்பனியின் இனம்கானப்பட்ட மொத்த வருமானம் யாது?
1) ரூ 240 000 2) ரூ 200 000 3) ரூ 150 000
4) ரூ 180 000 5) ரூ 160 000 (…….)

24) 31.3.2022 இல் உழைக்கப்படாத வருமானம் யாது?
1) ரூ 40 000 2) ரூ 50 000 3) ரூ 48 000
4) ரூ 10 000 5) ரூ 60 000 (…….)

- வரையறுத்த மஜிக் கம்பனியின் ஏடுகளில் 1.4.2021 இல் உள்ள மீதிகள் வருமாறு

	ரூபா 000
ஓவ் ரூ 12 விலையில கூறப்பட்ட பங்கு மூலதனம்	1200
நிறுத்திவைத்தலாபம்	480
காணி மறுமதிப்பீட்டு மிகை	120

31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டில் ரூ 240 000 பெறுமதியான பங்குகள் நிறுத்திவைத்தலாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டதுடன், காணி ரூ 100 000 ஆல் குறைத்து மீள் மதிப்பிட்டதுடன். கட்டிடம் முதல் தடவையாக ரூ 80 000 ஆல் கூட்டி மீள் மதிப்பிடப்பட்டதுடன் ஆண்டில் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்குலாபம் ரூ 50 000 31.3.2022 நிறுத்திவைத்தலாபம் ரூபா 360 000 ஆகும்.

- **25, 26, 27 ம் வினாக்களுக்கு வடை தருக**

25) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியண்டுக்கான ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?
1) ரூ 20 000 2) ரூ (20 000) 3) ரூ 40 000
4) ரூ (40 000) 5) ரூ 50 000 (…….)

26) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் யாது?
1) ரூ 170 000 2) ரூ 190 000 3) ரூ 150 000
4) ரூ 240 000 5) ரூ 250 000 (…….)

27) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியண்டில் உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு யாது?
1) ரூ (100 000) 2) ரூ 100 000 3) ரூ 1900 000
4) ரூ 340 000 5) ரூ (70 000) (…….)

- வரையறுத்த லிபிட்டா கம்பனியின் 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.
மொத்த விற்பனை ரூ 360 000,
மொத்தலாபம் ரூ 160 000
செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத் தேய்வு ரூ 15000 உட்பட) ரூ65000
வட்டிக்கொடுப்பனவு ரூ 8000
வரிக்கொடுப்பனவு ரூ 22000
31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டில் இருப்பு , கடன்கொடுநர் முறையே ரூ 6000, ரூ 15000 ஆல் அதிகரித்தது அத்துடன் கடன்பட்டோர் ரூ 24000 ஆல் குறைவடைந்தது.
31.3.2022 இல் இருப்பு ரூ 28 000 ஆகும். விற்பனை கொள்வனவுகள் யாவும் கடனுக்கே மேற்கொள்ப்பட்டன

- **28ம் 29ம் வினாக்களுக்கு விடை தருக**

28) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?
1) ரூ 153000 2) ரூ 113000 3) ரூ 73000
4) ரூ 93000 5) ரூ 143000 (…….)

29) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கையிருப்பு புரள்வு விகிதம் யாது?
1) 4 தடவைகள் 2)5 தடவைகள் 3) 6 தடவைகள்
4) 8 தடவைகள் 5) 10 தடவைகள் (…….)

30) கிரயங்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை சரியென கூறுக.
A - இருப்பு மதிப்பீட்டுக்காக கிரயங்களை உற்பத்திக் கிரயம், காலக்கிரயம் என வகைப்படுத்தப்படும்.
B – காலக்கிரயங்கள் இறுதி இருப்பு மதிப்பீட்டின்போது உள்ளடக்கப்பட மாட்டது.
C – நேர்க் கிரயங்கள் எல்லாம் மாறும் கிரயங்கள் ஆகும்
D – அலகொன்றிற்கான நிலையான கிரயம் உற்பத்தி அலகுகள் அதிகரிக்கும் படிப்படியாக குறைவடைந்து செல்லும்
1) A. B 2) A.B.C 3) A. B 4) A.C.D 5) A.B.D (…….)

- **31- 50 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தரப்பட்ட புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31) பின்வரும் கூற்றுகளில் சரியாயின் (T) எனவும் பிழையாயின் (F) எனவும் குறிப்பிடுக.

கூற்றுக்கள்	சரி/ பிழை
A – முகாமைக் கணக்கீட்டின் பரப்பை விட கிரயக் கணக்கீட்டின் பரப்பு அதிகமாகும்.	…………
B – குறித்த நோக்குடைய நிதி அறிக்கைகள் அக்கறையுடைய அனைவருக்கும் தகவல் வழங்குகின்றது	………….
C – முகாமைக் கணக்கீடு எதிர்கால தகவல்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படும்.	…………
D – பொது நோக்குடைய நிதி அறிக்கைகள் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்படுகின்றது	……………

32) பின்வருவன தேறிய சொத்துக்களில் ஏற்படும் தேறிய தாக்கத்தினை **அதிகரிப்பு, குறைவு, மாற்றமின்மை** என எடுத்துக்காட்டுக.

கொடுக்கல் வாங்கல்	தாக்கம்
A – சென்றாண்டு சென்மதி சம்பளம் ரூ 5000 இவ்வாண்டு செலுத்தப்பட்டது	………………
B – உரிமையாளரின் சொந்தப் பணத்திலிருந்து நிறுவன மின்சாரம் ரூ 3000 செலுத்தப்பட்டது	………………
C - இவ்வாண்டுக்கான வருமதி வாடகை ரூ 10000	……………….
D – எதிர் மாற்றல் ரூ 5000	………………

33) பின்வரும் இடைவெளியை நிரப்புக.

A. இருப்புக்களானது முதல் உள் முதல் வெளியே (FIFO) முறையில் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் பதிவு செய்வது கணக்கீட்டின் ……………………………….. சூழல் ஆகும்.

B. பொதுப் பேரேட்டுக் கணக்கு மீதிகளை உள்ளடக்கி குறிக்கப்பட்டகாலப்பகுதியின் முடிவில் தயாரிக்கப்படும் கூற்று ……………………………….. ஆகும்.

C. இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை அவற்றின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தி இவை இடம்பெற்ற கால ஒழுங்கில் பதிவு செய்யும் ஏடு ……………………………… ஆகும்

D. கடந்த கால நிகழ்வுகளினால் உருவானதும், ………………………… மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதுமான ……………………..… ………...……………….. பொறுப்பு ஆகும்

- மாதுமை நிறுவனத்தில் 1.5.2022 இல் மொத்தச் சொத்து ரூ 500 000, மொத்தப் பொறுப்பு ரூ 280 000 மே மாத தகவல்கள் வருமாறு.
  - ➢ மே மாத கடன் கொள்வனவு ரூ 160 000 இதில் ரூ 10 000 உடனடியாக வழங்குநருக்கு திருப்பப்பட்டது.
  - ➢ மே மாத தேறிய கொள்வனவுகளில் 2/3 பகுதி ரூ 200 000 க்கு கடனுக்கு விற்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட விற்பனைச் செலவு ரூ 12000
  - ➢ மே மாத கடன் விற்பனையில் ரூ 8000 திருப்பப்பட்டது இதன் கிரயம் ரூ 6000
  - ➢ மே மாத தேறிய கடன் விற்பனையில் ½ பகுதி கடன்பட்டோரிடமிருந்து 5% கழிவுடன் பெறப்பட்டது.

- **34ம் 35ம் வினாக்களுக்கு விடை தருக**

34) அ) மே மாத வருமானம் ரூ ……………………………….

ஆ) மே மாத செலவினம் ரூ ……………………………….

35) அ) மே மாதத்திற்கான மொத்தலாபம் ரூ …………………………….

ஆ) மே மாத தேறியலாபம் யாது ரூ ……………………………….

இ) 31.5.2022 இல் உரிமையாண்மை ரூ ………………………………

- சகானா நிறுவனத்தின் 31.3.2022 இல் முவடைந்த தினத்தில் பரீட்சை மீதி சமப்பட வில்லை பின்னர் பின்வரும் காரணங்கள் கணக்டு பிடிக்கப்பட்டன.
  அ) விற்பனைத் திரும்பல் ரூ 5000 விற்பனை நாளேட்டில் பதியப்பட்டது.

ஆ) கடன்பட்டோரிடம் பெற்று வைப்பிலிட்ட ரூ 20000 காசோலை மறுக்கப்பட்டது. இம் மறுத்தல் பற்றிய பதிவுகள் காசுக் கட்டுப்பாட்டு கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.

இ) பேரேட்டில் கானப்பட்ட மின்சாரக் கணக்கு ரூ 3500 பரீடசை மீதிக்கு ரூ 5300 என எடுத்துவரப்பட்டது.

- **மேற்படி தகவல்களை அடிப்படையாக கொண்டு 36ம் 37ம் வினாக்களுக்கு விடை தருக.**

36) மேற்படி பிழை தவறுகளால் பரீட்சை மீதியின் எப்பக்கம் எவ்வளவு தொயையால் குறைவாக கானப்படும்.

………………………………………………………………………………………………………

37) மேற்படி பிழை தவறுகளால் உரிமையாண்மையில் ஏற்பட்ட தாக்கம் யாது?

………………………………………………………………………………………………………

38) கணக்கீட்டு எண்ணக்கருக்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறுக.

கூற்றுக்கள்	(சரி/பிழை)
A – வியாபார வருமதியை சொத்தாகவும் வியாபார சென்மதியை பொறுப்பாகவும் வெளிப்படுத்துவது அட்டுறு எண்ணக்கரு அடிப்படையிலாகும்	…………..
B – நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு இடுவதற்கு அடிப்படையை வழங்குவது தொடர்ந்து செல் எண்ணக்கரு ஆகும்	……………
C – பணத்தின் காலப் பெறுமதி எல்லாக்காலங்களிலும் சமனாக காணப்படும் என்பது பணஅளவீட்டு எண்ணக்கருவாகும்	…………….
D – வருமானக்கூற்றில் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் தனியாக காட்டுவது வெளிப்படுத்தல் எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்	……………..

39) உற்பத்திக் கிரயம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா/ பிழையா என கூறுக

A – முதற்கிரயத்துடன் மொத்த மேந்தலையை கூட்டிப் பெறப்படுவதாகும்	……………..
B – முதற்கிரயத்துடன் மாற்றல் கிரயத்தை கூட்டிப் பெறப்படுவதாகும்	…………….
C – பயன்படுத்திய மூலப்பொருள் கிரயத்துடன் மாற்றல் கிரயத்தை கூட்டிப் பெறப்படுவதாகும்	……………..
D – விற்பனைக் கிரயத்துடன் இறுதி முடிவுப்பொருள் இருப்பை கூட்டி ஆரம்ப முடிவுப்பொருள் இருப்பை கழித்துப் பெறப்படுவதாகும்.	…………….

40) விளையாட்டுக் கழகம் ஒன்றில் இடம்பெற்ற தகவர்கள் பின்வருவனவற்றுள் ஏற்பபடுத்தும் தாக்கத்தை அதிகரிப்பு, குறைவு மாற்றமின்மை என்பவற்றின் மூலம் எடுத்துக்காட்டுக.

நடவடிக்கை	உரிமை	திரண்ட நிதி	சொத்து
1) விளையாட்டு உபகரண நிதிக்கு பெற்ற காசு	……………….	……………..	………………
2) விளையாட்டு உபகரண நிதியை பயன்படுத்தி விளையாட்டு உபகரணம் பெறப்பட்டது	………………	…………….	………………
3) ஆயுள் அங்கத்தவ சந்தாவில் இவ்வாண்குரியதை வருமானமாக இனம்கானல்	……………….	……………	…………………..

41) ஒரு பங்குடைமையில் மல்லிகை, முல்லை, ரோஜா என்போர் இலாபநட்டங்களை 2:2:1 என பகிரும் பங்காளர்கள் பங்காளர் மூலதன மீதிக்கு வருடாந்தம் 10% வட்டி வழங்க வேண்டும் 1.4.2021 வருட ஆரம்பத்தில் ரோஜா இளைப்பாறினார். மல்லிகையும், முல்லையும் இலாபநட்டங்களை சமனாக பகிர்ந்தனர். 1.4.2021 இல் பங்காளார் மூலதன மீதிகள் முறையே ரூ 320 000, ரூ 280 000, ரூ 150 000 ஆகும். 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மூலதனவட்டி மல்லிகைக்கும், முல்லைக்கும் முறையே ரூ 30000, ரூ 26000 ஆகும். எனின் பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு யாது?

…..……………………………………………………………………………………………………

42) பங்குடைமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா / பிழையா என கூறுக

A – பங்காளர் சேரல் அல்லது விலகளின்போது பங்குடைமையின் இலாபத்தன்மை மாற்றமடையும். ………………….

B – பங்காளர் கடனுக்கு செலுத்த வேண்டியவ வட்டி பங்குடைமையின் உரிமையை குறைக்கும். …………………

C – பங்காளரால் எடுக்கப்படும் அவரது மூலதனவட்டி பங்குடைமையின் உரிமையை குறைக்கும். …………………

D – பங்காளர் சேரலின்போது மேற்கொள்ளப்படும் நன்மதிப்பு சீராக்கத்தால் பங்குடையின் உரிமை குறையும். ………………….

43) பின்வரும் நிகழ்வுகள் LKAS 08 இன்படி மதிப்பீட்டு மாற்றமா கொள்கை மாற்றமா என்பதை குறிப்பிடுக.

நிகழ்வுகள்	மதிப்பீட்டு மாற்றம்/ கொள்கை மாற்றம்
A- பெறுமானத் தேய்விடல் முறையில் ஏற்படும் மாற்றம்	……………………………………….
B- இருப்பு மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மற்றம்	……………………………………….
C எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கீட்டில் ஏற்படும் மாற்றம்	……………………………………….
D சொத்துக்கள் கிரய மாதிரியிலிருந்து மீள்மதிப்பீட்டு மாரிதிக்கு மாற்றமடைதல்	………………………………………

44) வரையறுத்த சுமங்கலி கம்பனியின் பொருள் ஒன்றுடன் தொடர்பான தகவல்கள் வருமாறு
சிக்கனக்கட்டளைத் தொகை 800 அலகுகள்
கட்டளையொன்றிற்கான கட்டளையிடும் செலவு ரூ 50.00
அலகொன்றிற்கான பராமரிப்புச் செலவு ரூ 1.00

அ) இருப்பின் வருடாந்த கேள்வி யாது?

……………………….……………………………………………………………………………..

ஆ) சிக்கன கட்டளை மட்டத்தில் இருப்புக்கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய மொத்தச் செலவை கீழ்வரும் அட்டவணையில் நிரப்புக.

கட்டடளையிடும் செலவு ……………………….

பராமரிப்புச் செலவு ……………………….

45) புதிய கணக்கீட்டுச் சட்டகத்தின் படி பின்வருவனவற்றை வரையறுக்க

அ) பொளாதார வளம் என்றால் என்ன?

……………………………………………………….…………………………………………

……………………………………………………..…………………………………………

ஆ) கணக்கீட்டு மூலங்களை அளவிடும் பிரதான அளவீட்டு அடிப்படைகள்

1) …….……………………………………………..……………………………………

2) …….……………………………………………..……………………………………

46) கணக்கீட்டு விகிதம் தொடர்பில் பின்வரு கூற்றுக்கள் சரியா பிழையா என கூறுக

A. இருப்பு வைத்திருத்தல் காலத்தில் ஏற்படும் அதிகரிப்பு நிறுவனத்தினான வினைத்திறனான இருப்புக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. ………………

B. பங்கொன்கொன்றிற்கான உழைப்பு அதிகமாக காணப்படின் குறுகிய காலத்தில் முதலீட்டை திரும்ப பெறலாம் ………………

C. நடைமுறை விகிதம் 2:1 என காணப்படும் போது ரூ 20000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யும்போது நடைமுறை விகிதம் அதிகரிக்கும் ………………

D. கடன்படிட்டேர் புரள்வு அதிகமாக காணப்படும்போது நிறுவனத்திற்கு வாடிக்கையாளருக்குமிடையே சிறந்த உறவுத்தன்மை காணப்படுகின்றது ………………

- வரையறுத்த டோக்கியொ கம்பனியின் 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

ஆண்டுக்கான இலாபம்	68000
21/22 ம் நிதியாண்டுக்கானவரி	32000
ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு	12000
செலுத்திய வட்டி	8000
இருப்புக் குறைவு	15000
நீண்டகாலக்கடன் பெறுகை	150000
செலுத்திய பங்குலபம்	40000
1.4.2021 இல் காசும் காசுக்கு சமனானதும்	158000
31.3.2022 இல் காசும் காசுக்கு சமானவையும்	215000
31.3.2022 இல் வரிப்பொறுப்பு ரூ	12000

47ம் 48ம் வினாக்களுக்கு விடை தருக

47) செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

48) முதலீட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

49) சியானோ கம்பனி தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்து 1200 அலகுகளை உற்பத்தி செய்யும்போது ரூ 44000 மொத்த உற்பத்திக் கிரயம் ஏற்பட்டது உற்பத்தி அலகுகள் 2000 அதிகரிக்கும்போது மொத்த உற்பத்திச் கிரயம் ரூ 60000 ஆக அதிகரித்தது. பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூ ………………………………

ஆ) 2000 அலகு உற்பத்தியின்போது அலகொன்றிற்கான நிலையான செலவு ……………………

50) கிரயங்களை பிவரும் அடிப்படையின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

அ) இருப்பு மதிப்பீட்டின் அடிப்படையில்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

ஆ) கிரய நடத்தையின் அடிப்படையில்

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
5th Term Examination - 2022

FWC

கணக்கீடு II	**Three Hours**	**33**	**T**	**II**
Accounts II	**Gr -13 (2022)**			

அறிவுறுத்தல்கள்:

- ❖ *முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*
- ❖ *ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.*
- ❖ *உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.*
- ❖ *இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.*

பகுதி - II

வினா இல 01

வரையறுக்கப்பட்ட ரோமியோ கம்பனியின் 31.3.2022 இல முடிவடைந்த தினத்தில் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு

விபரம்	வரவு ரூ 000	செலவு ரூ 000
ஒவ் ரூ 15 கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		30000
பொதுஒதுக்கம்		15000
1.4.2021 இல் நிறுத்திவைத்தலாபம்		10500
விற்பனை		35000
விற்பனைக்கிரயம்	18000	
31.3.2022 இருப்பு	290	
நிர்வாகச் செலவு	4800	
விநியோகச் செலவு	3200	
சொத்துப் பயன்படுத்தல் உரிமை	3000	
1.4.2021 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு		110
1.4.2021 இறுதிக்காலண்டு வருமான வரி ஏற்பாடு		130
செலுத்திய வருமானவரி	510	
சென்மதி நிர்வாகச் செலவுகள்		20
வியாபார வருமதி	500	
வியாபார சென்மதி		400
1.4.2021 வி.வருமதி எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம்		35
1.4.2021 இல் காணிமறுமதிப்பீட்டு மிகை		1200
காணி	30 000	
வங்கிக் கடன்		4000
கட்டிடம்	20 000	
நிதிக்கிரயம்	160	
மோட்டார் வாகனம்	22 000	
31.3.2022 இல் திரண்ட பெறுமானத் தேய்வு – கட்டிடம்		4200
31.3.2022 இல் திரண்ட பெறுமானத் தேய்வு – மோட்டார்		3800
ஏனைய வருமானம்		200
ஏனைய செலவு	180	
காசும் காசுக்கு சமனானவையும்	3 955	
	106 595	**106 595**

மேலதிக தகவல்கள் :

1. 31.3.2022 இல் உள்ளபடியான இருப்பின் விபரம் வருமாறு.

இருப்பின் வகை	கிரயம் 000	தேறிய தேறத்தக்க பெறுமதி 000
MX	105	95
MP	75	80
MR	110	105
மொத்தம்	**290**	**280**

இருப்புக்கள் அலகுரீதியாக மதிப்பிடப்பட்டு அவற்றின் கிரயப் பெறுமதியில் கணக்குகளில் பதிவிடப்பட்டது.

2. நிர்வாகச் செலவு ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம் ரூ 450 000 உள்ளடக்கியுள்ளது. EPF இற்கு ஊழியர் 10% தொழில்கொள்வோன் 15% பங்களிப்புச் செய்கின்றனர். ETF தொழில்கொள்வோன் பங்களிப்பு 5% ஆகும். எனினும் நடைமுறையாண்டிற்கான EPF, ETF பங்களிப்பு தொர்பில் கணக்குகளில் பதியப்படவுமில்லை செலுத்தப்படவுமில்லை.
3. சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடப்பட்டது.
4. கட்டிடம் 5% மோட்டார் 10%
5. மோட்டார் வாகனம் பொருள் விநியோகத்திற்கு பயன்படுவதுடன். ஏனைய சொத்துக்கள் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றது. மேற்படி எல்லாச் சொத்துக்களின் (குத்தகைச் சொத்து தவிர) ஆரம்ப மீதிகளுக்கு (1.4.2021) நேர்கோட்டு முறையில் இவ்வாண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்குகளில் முறையாக பதியப்பட்டது.
6. 31.3.2022 இல் காணி 28000 0000 பெறுமதியிலும் கட்டிடம் ரூ 20000 000 பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. இவ்வாண்டுக்கான மறுமதிப்பீடு தொடர்பில் பதிவுகள் எவையும் ஏடுகளில் இடம்பெறவில்லை.
7. 1.10.2021 இல் கட்டிடம் ரூ 3000 000 பெறுமதியல் நீடிப்பு செய்யப்பட்டது இவை ஏடுகளில் முறையாக பதியப்பட்டன. ஆத்துடன் 31.3.2021 இல் ரூ 1800 000 திரண்ட பெறுமானத் தேய்வையும் இத்தினத்தில் ரூ 3200 000 முன்கொண்டுவரும் பெறுமதியுடைய மோட்டார் 1.10.2021 இல் ரூ 3000 000 இற்கு விற்கப்பட்டது இதன்போது விற்கப்பட்ட காசு காசுக்கட்டுப்பாட்டு கணக்கில் வரவிலும் மோட்டார் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதை தவிர மோட்டார் அகற்ல் தொடர்பான வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
8. 31.3.2022 இல் வியாபார வருமதிகளில் 10% சமனாக எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஓதுக்கத்தை சீராக்குக.
9. 20/21 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமான வரிக்கு ரூ 150 000 இணங்கப்பட்டு செலுத்தப்பட்டதுடன். 21/22 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமானவரிக்கு ரூ 180 000 மதிப்பிடப்பட்டது.
10. விற்பனை ஒரு வருட உத்தரவாத அடிப்படையில் செய்யப்படுகின்றது சென்றாண்டு உத்தரவாதம் தொடர்பில் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ 120 000 விநியோகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.3.2022 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக இவ்வாண்டு விற்பனையில் ரூ 150 000 ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
11. பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 300 000 மாற்றீடு செய்வதுடன். வருட இறுதியில் உள்ள ஒவ்வொன்றும் பத்துப் பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ரூ 15 விலையில் நிறுத்திவைத்தலாத்தை பயன்டுத்தி மூலதனமாக்கப்பட்டது.
12. கம்பனி 1.4.2021 இல் உபகரணமொன்றை 4 வருட சொத்துப் பயன்படுத்தல் உரிமை அடிப்படையில் கொள்வனவு செய்தது. உடனடிக் கொடுப்பனவாக ரூ 2000 000 செலுத்தப்பட்டதுடன். வருடாந்தம் நிலையான தவனைக்கொடுப்பனவாக வருட இறுதியில் ரூ 1000 000 செலுத்தப்படும். இவ்வாண்டுக்கான தவனைக்கட்டனமும், உடனடிக்கொடுப்பனவும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து சொத்துப் பயன்படுத்தல் உரிமைக் கணக்கிற்கு வரவிடப்பட்டதை தவிர வேறுபதிவுகள் எவையும் இடம்பெறவில்லை. உபகரணம் பயன்படும்தும் உரிமை காலத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படும் குத்தகை வட்டி 10% 4 வருடத்திற்கான ஆண்டிற்கான கழிவிடல் காரணிகள்

ஆண்டு	கழிவிடல் வீதம்
21/ 22	0.9
20/21	0.8
19/20	0.7
18/19	0.6

வேண்டப்படுவது

LKAS 1 இன்டிபடி பிரசுரிக்கத்தக்க வகையில் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.

1) **31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று**
2) **31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மாற்றக் கூற்று**
3) **31.3.2022 இல் உள்ளபடி நிதி நிலைமைக் கூற்று**

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 02

அ) MX என்ற பொருளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று விசேடவகையான மூலப்பொருட்களான M .X என்ற இரண்டு மூலப்பொருட்களை உற்பத்தியில் பயன்படுத்துகின்றது ஒரு MX ஐ உற்பத்தி செய்வதற்கு M மூலப்பொருளில் 4 அலகும், X மூலப்பொருளில் 5 அலகும் தேவைப்படுகின்றது MX இன் **<u>மாதாந்த உற்பத்தியானது 200 இருந்து 300</u> அலகுகள்** ஆகும். MX இன் வருடாந்த கேள்வி 4000 அலகுகள் MX இன் ' கட்டளை ஒன்றிற்கான கிரயம் ரூ 50 இதன் அலகொன்றின் வருடாந்த பராமரிப்பு கிரயம் ரூ 10 இம் மூலப்பொருட்களுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.

மூலப்பொருள்	M	X
மறுகட்டளைத் தொகை (ரூபா)	50000	?
ஆகக்கூடிய இருப்பு மட்டம் (அலகுகள்)	?	12000
மறுகட்டளை காலம் (மாதாந்தம்)		
ஆகக்கூடியது	8	6
சராசரி	6	4
மூலப்பொருளுக்கான அலகு கிரயம் (ரூ)	10	5

வேண்டப்படுவது

இரு மூலப்பொருள் தொடர்பில் பின்வரும் இருப்புமட்டங்களை கணிக்குக.

1. இரு மூலப்பொருளுக்குமான மீள்கட்டளை மட்டம்
2. இரு மூலப்பொருளுக்குமான ஆகக்குறைந்த இருப்பு மட்டம்
3. M மூலப்பொருளின் ஆகக்கூடிய இருப்பு மட்டம்
4. X மூலப்பொருளின் மறுகட்டளைத்தொகை
5. M மூலப்பொருளின் சாராசரி இருப்பு மட்டம்
6. MX என்ற முடிவுப்பொருளின் சிக்கன கட்டளைத் தொகை
7. MX இன் வருடாந்த மொத்தக் கட்டளையிடும் செலவு
8. MX இன் வருடாந்த மொத்தக் பராமரிப்புச் செலவு

(20 புள்ளிகள்)

ஆ) தொழில்சார் கற்கை நெறியை நடாத்தும் கல்வி நிறுவனமொன்றில் இரு நிரந்தர விரிவுரையாளர்களும், ஒரு வருகை விரிவுரையாளரும் விரிவுரையாற்றுகின்றனர் நிரந்தர விரிவுரையாளர்களுக்கு மாதாந்தம் ரூ 120 000 அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படுவதுடன் வருகை வரிவுரையாளருக்கு மணத்தியாலத்திற்கு ரூ 2000 அடிப்படைச் சம்பளமாக வழங்கப்பட வேண்டும். ஓவ்வொருவரும் மாததாந்தம் கற்பிக்கவேண்டிய அடிப்படை வேலை மணத்தியாளம் 40 மணியாகும் 2022 மே மாதத்திற்கான தகவல்கள் வருமாறு.

நிரந்தர விரிவுரையாளர்கள்	வேலை மணி	வழங்கப்படும் பிராயனப்படி	திருத்தப்பட்ட விடைத்தால்
திரு ச. சீராளன்	44	12000	60
திரு ம. ராகவன்	50	15000	40

வருகை விரிவுரையாளர்கள்	வேலை மணி	வழங்கப்படும் பிராயனப்படி	திருத்தப்பட்ட விடைத்தால்
திரு ச. தேசிகன்	52	10000	80

மேலதிக தகவல்கள்

1) ஒவ்வொரு ஊழியருக்கும் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் 10% தொழில்கொள்வோன்15% பங்களிப்பு செய்கின்றனர்.
2) திருத்தப்படும் விடைத்தால் ஒன்றிற்கு ரூ 250 வழங்கப்பட வேண்டும்
3) சிராளனுக்கும் ராகவனுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்திலிருந்து வீட்டுக் கடன் தவனைக்கொடுப்பனவாக 10% கழிக்கப்படும்.
4) ஒவ்வொரு ஊழியருக்கும் அவர்களது சம்பளம் மாத இறுதியில் செலுத்தப்படும்.
5) மேலதிக நேரக்கொடுப்பனவு மணிக்கான அடிப்படைக் கூலிவீதத்தின் 1 ½ மடங்காகும்

வேண்டப்படுவது

1) மே மாத சம்பளப்பட்டியல்

2) வேண்டிய நாட்குறிப்பு பதிவுகள்

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 03

வருனா எனபவர் தனியுடைமை வியாபாரமொன்றின் உரிமையாளர் 31.7.2022 இல் முடிவுற்ற மாதத்திற்கான வரைவு வருமானக் கூற்று ரூ 124000 தேறிய இலாபத்தைக் காட்டியது 31.7.2022 இல் முனனெடுக்கப்பட்ட காசுக்கட்டுப்பாட்டு கணக்கு ரூ 120 000 காட்டியது. மேற்படி மீதிகள் கணிப்பீட்டின்போது பின்வரும் கொடுக்கல் வாங்கல் கணக்குப் புத்தகங்களில் தவறவிடப்பட்டதுடன் சில விடயங்கள் தவறாக பதியப்பட்டிருந்தது

இல	கொடுக்கல் வாங்கல்
1	*சென்ற மாதம் பெறப்பட்ட ரூ 30000 முற்பனத்திற்றாக இம்மாதம் ரூ 25000 கிரயமான பண்டங்கள் ரூ 40 000 விற்கப்பட்டது. மிகுதி பெறவேண்டியுள்ளது.*
2	*சென்ற மாதம் செலுத்தப்பட்ட ரூ 40000 தொகைக்காக இம்மாதம் ரூ 30000 கிரயமான பண்டங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.*
3	*1.7.2022 இல் ரூ 40000 கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொறி கொள்வனவு நாளேட்டில் பதியப்பட்டது. இதற்கான கொடுப்பனவு 2 ஆண்டுகளில் செலுத்தப்படும். பொறிக்கு ஆண்டுக்கு 12% தேய்விடப்பட்டது*
4	*கடன்பட்டோரிடம் வரவேண்டிய ரூ 20000 தொகைக்காக அதே நபருக்கு கடன்கொடுநர் என்றவகையில் செலுத்தப்பட வேண்டிய ரூ 15000 எதிரீடு செய்யப்பட்டதுடன் மிகுதி அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்பட்டது*
5	*சிறுவர் இல்ல மொன்றிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள் நன்கொடை ரூ 5000*
6	*கடன்பட்டோரால் நேரடியாக வங்கியில் வைப்பிலிட்டது ரூ 20000*
7	*2022 யூலை மாத வங்கிக்கூற்றில் காட்டப்பட்ட வங்கிக்கட்டனம் ரூ 2000 நிலையியற்கட்டளை காப்புறுதி ரூ 10000 இதில் வருனாவின் ஆயுட்காப்புறுதி ரூ 4000 உள்ளடங்கியுள்ளது*
8	*2022 யூலை, ஆகஸ்ட், செப்ரம்பர் மாதங்களுக்காக யூலை மாதம் செலுத்தப்பட்ட வாடகை ரூ 12000 முழுவதும் முற்பன வாடகையாக பதியப்பட்டது*
9	*யூலை மாதம் கடன்பட்டோரிம் பெறப்பட்டு வங்கியில் வைப்பிலிட்ட ரூ 12000 காசோலை 31.7 வரை வங்கியினால் சேர்க்கப்படாதுள்ளதுடன் கடன்கொடுநருக்கு செலுத்திய ரூ 8000 காசோலை 31.7 வரை மாற்றப்படாதுள்ளது. எனினும் இவை நிறுவன கணக்குகளில் முறையாக பதியப்பட்டன.*
10	*மேலே கணிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 10% எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம் செய்யப்பட்டது*

வேண்டப்படுவது

1. கீழ்வரும் சமன்பாட்டில் மேற்படி திருத்தங்ளை பதிவு செய்து காட்டுக
   ஆதனம்பொறி + இருப்பு + வியாபார வருமதி + ஏனைய வருமதி + காசு =
   வியாபார சென்மதி + ஏனைய சென்மதி + நீண்டகால கடன + உரிமை
2. 2022 யூலை மாதத்திற்கான திருத்தியலாபம்
3. 2022 யூலை மாதத்திற்கான திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு
4. 2022 யூலை மாத வங்கிக்கணக்கிணங்க கூற்று

(40 புள்ளிகள்)

வினா இல 04

அ) ஒரு பங்குடைமையில் பரன், தரன் கரன் என்போர் இலாபநட்டங்களை 5:3:2 என பகிரும் பங்காளர்கள் பங்காளர் ஆரம்ப மூலதன மீதிக்கு 10% வட்டி கணிக்கப்படும் ஒவ்வொரு பங்காளருக்கும் ஆண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 40 000, ரூ 30 000, ரூ 20 000 வழங்கப்படவேண்டும்.

31.3.2022 தரன் இளைப்பாற பரனும் கரனும் இலாபநட்டங்களை 3:2 என பகிர்ந்துகொண்டு பங்குடைமையை நடாத்தினர். தரனுக்கு செலுத்தப்படவேண்டிய தொகையில் 50% உடனடியாக செலுத்தப்பட்டு மிகுதி கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது

31.3.2022 இல் இப் பங்குடைமையின் கணக்கு பயிலுநரால் தயாரிக்கப்பட்ட பங்காளர் நடைமுறைக் கணக்கு வருமாறு

விபரம்	பரன்	தரன்	கரன்	விபரம்	பரன்	தரன்	கரன்
மீதி			5 000	மீதி	15 000	25 000	
நன்மதிப்பு	60 000		40 000	நன்மதிப்பு	50 000	30 000	20 000
பற்று	10 000	5 000	3 000	மூல.வட்டி	50 000	40 000	30 000
				ப.சம்பளம்	40 000	30 000	20 000
மீ.செ	105 000	152 000	42 000	கடன் வட்டி	-	12 000	-
				இலாபம்	20 000	20 000	20 000
	175 000	157 000	90 000		175 000	157 000	90 000

மேற்படி கணக்கு பயிலுநரால் தயாரிக்கப்பட் கணக்குகளிலிருந்து பின்வரும் பிழை தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

1) நன்மதிப்பு நீராக்கம் தவறாக நடைமுறைக் கணக்கில் சீராக்கப்பட்டது.
2) பங்காளருக்கிடையிலான இலாப பகிர்வு சமனாக பகிரப்பட்டது.
3) கடன்வட்டி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத போதிலும் கடனுக்கு 15% வட்டி கணிக்கப்பட்டது.
4) பங்காளர்கள் அனைவரும் பண்டங்களையே பற்றியிருந்தனர் எனினும் இவை காசுப் பற்றாக கருதி கணக்கேடுகளில் பதியப்பட்டது.
5) தரனது நடைமுறைக்கணக்கு மீதி மூலதன கணக்கிற்கு மாற்றப்படாது மீதி முன்கொண்டு செல்லப்பட்டது.
6) பரனது சொந்த ஆயுட்காப்புறுதிக்கு பங்குடைமையால் செலுத்தப்பட்ட ரூ 12000 காப்புறுதி முழுவதும் பங்குடைமையின் செலவாக கருப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டது.
7) பங்குடைமையின் மோட்டார் வாகனத்தை பழுதுபார்தலுக்கு கரனால் தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்திய ரூ 8000 தொடர்பில் கணக்கேடுகளில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது

1) இலாபச்கசீராக்க கூற்று
2) இலாபநட்ட பகிர் கணக்கு
3) பங்காளர் நடைமுறை கணக்கு
4) பங்காளர் மூலதனக் கணக்கு

(22 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவல்கள் கபிலன் நிறுவனத்தின் 2022 ஜனவரி மாதத்திற்கான இருப்பு தொடர்பான தகவல்கள் வருமாறு

திகதி	கொள்வனவு		வழங்கல் (அலகு)	மீதி (அலகு)
	அலகு	அலகு கிரயம்		
1.1				400
5.1	250	20		650
8.1	350	40		1000
12.1			800	200
18.1	300	30		500
25.1			300	200

1.1.2022 இல் உள்ள மீதிகள் 25.12.2021 ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் கொள்வனவு செய்யப்பட்ட 250 அலகுகளையும் 28.12.2021 இல் ஒவ்வொன்றும் ரூ 20 விலையில் கொள்வனவு செய்யப்பட்ட 150 அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது.

வேண்டப்படுவது

1) *முதல் உள் முதல் வெளியே (FIFO) முறையில் 31.1.2022 இல் இருப்பின் கிரயம்*
2) *நிறையளித்த சராசரி (WAC) முறையில் 31.1.2022 இருப்பின் கிரயம்*
3) *முதல் உள் முதல் வெளியே (FIFO) முறையில் ஜனவரி மாத விற்பனைக் கிரயம்*
4) *நிறையளித்த சராசரி (WAC) முறையில் ஜனவரி மாத விற்பனைக் கிரயம்*
5) *ஒவ்வொரு அலகுகளும் ரூ 80 விலையில் விற்கப்படின் ஒவ்வொரு முறையிலும் மொத்தலாபம் யாது?*

(18 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 05

அ) வரையறுத்த டெல்ரா கம்பனியின் 31.3.2022, 31.3.2021 இல் உள்ள மீதிகள் வருமாறு

		31.3.2022 ரூபா 000		31.3.2021 ரூபா 000
ஆதனம்பொறி உபகரணம் கிரயம்/ம.பெ	24000		25000	
தேய்மான ஒதுக்கம்	(2600)	21400	(3000)	22000
இருப்பு		4800		3200
வியாபார வருமதி		2400		3100
காசு		4400		3700
		33000		**32000**
கூறப்பட்ட பங்குமூலதனம் (பங்கொன்று ரூ 10)		21000		20000
நிறுத்திவைத்த லாபம்		7000		6000
மறுமதிப்பீட்டு ஒதுக்கம்		-		1000
பொது ஒதுக்கம்		2000		1400
வங்கிக்கடன்		2000		2500
சென்மதி நிர்வாகச் செலவு		300		200
சென்மதி வட்டி		100		-
வரிச் சென்மதி		200		400
வியாபரச் சென்மதி		400		500
		33000		32000

மேலதிக தகவல்கள்

1. 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கு மதிப்பிடப்பட்ட வரி ரூ 400 000 சென்ற நியாண்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வரி முழுவதும் இவ்வாண்டு இணங்கப்பட்டு செலுத்தப்பட்டது. சென்றான்டு வரி ஏற்பாடு மிகை பற்றாக்குறை எதுவுமில்லை
2. இவ்வாண்டு காணி ரூ 1500 000 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டது. இக்காணி சென்றாண்டு ரூ 1000 000 ஆல் கூட்டி மீள்மதிப்பிடப்பட்டது.
3. பொறி ஒன்று ரூ 400 000 இலாபத்தில் விற்கப்பட்டது. இது விற்கப்பட்ட தினத்தில் இதன் முன்கொண்டுவரும் தொகை ரூ 1000 000 ஆகும். ஆதணம் பொறி உபகரணத்தின் ஆண்டுப் பெறுமானத் தேய்வு ரூ 500 000 இவ் ஆண்டில் மேலும் ஒரு தொகுதி மோட்டார் கொள்வனவு செய்யப்பட்டது.
4. இவ்வாண்டு இறுதியில் ஒவ்வொன்றும் ரூ 10 விலையான 20000 பங்குகள் நிறுத்திவைத்த இலாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.
5. இவ்வாண்டு செலுத்தி பங்குலாபம் ரூ 200 000
6. இவ்வாண்டுக்கான வங்க்கிக்கடன் வட்டி ரூ 200 000 இதில் ரூ 100 000 31.3.2022 சென்மதியாகவுள்ளது
7. இவ்வாண்டு புதிதாக வழங்கப்பட்ட பங்குகள் எவையும் இவ்வாண்டு இலாபத்திற்கு உரித்துப் பெறமாட்டாது

வேண்டப்படுவது

LKAS 7 இன்படி 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(28 புள்ளிகள்)

ஆ) மேற்படி தகவல்களில் இருந்து 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் கணக்கீட்டு விகிதங்களை கணிக்குக.

1) உரிமை மீதான திரும்பல் வீதம்
2) வட்டிக்காப்பு விகிதம்
3) கடன் உரிமை விகிதம்
4) பங்கொண்டிற்கான உழைப்பு விகிதம்
5) மொத்தச் சொத்துக்கான வருவாய் வீதம்
6) கடன் வீதம்

(12 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 06

கீத்த்தி நிறுவனத்தின் 2022 மே மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

1.5 மீதிகள்

காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு ரூ 120000
மோட்டார் வாகனம் ரூ 300000
இருப்பு ரூ 50000
கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 60000
கடன்கொடுநா் கட்டுப்பாட்டுகணக்கு மீதி ரூ 40000
வங்கிக்கடன் ரூ 75000
சென்மதி VAT 5000

3.5 15% VAT உட்பட காசோலை விற்பனை 69000

5.5 15% VAT உட்பட காசோலை மூலம் கொள்வனவு 46000

7.5 காசோலை மூலம் வாடகை ரூ 12000

14.5 குகனுக்கு 15% VAT உட்பட விற்பனை 23000

16.5 1.5 உள்ள கடன்பட்டோரில் 2/3 பகுதி 10% கழிவு தள்ளி பெறப்பட்டது

18.5 15% VAT உட்பட ரமனனிடம் கொள்வனவு 11500

20.5 1.5 இல் உள்ள கடன்கொடுநருக்கு ¼ பகுதி 10% கழிவுதள்ளி காசோலை வழங்கப்பட்டது.

25.5 15% VAT உட்பட தீபனுக்கு விற்பனை ரூ 20700

26.5 15% VAT உட்பட தீசனிடம் கொள்வனவு ரூ 13800

27.5 வங்கிக்கடன் மீளளிப்பு ரூ 3000 வட்டி உட்பட ரூ 15000

28.5 பெற்றவாடகை ரூ 10000

29.5 VAT நீங்களாக குகனிடம் வரவேண்டிய தொகையில் 10% கழிவு தள்ளி அவரிடமிருந்து வரவேண்டிய தொகை முழுவதும் பெறப்பட்டது.

30.5 காசோலை மூலம் செலுத்திய Vat ரூ 3000

31.5 VAT நீங்களாக ரமனனுக்கு செலுத்தவேண்டிய தொகையில் 20% கழிவு தள்ளி அவருக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதும் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது

1. மே மாதத்திற்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்
   - அ) காசுப்பெறுவனவு நாளேடு
   - ஆ) காசுக்கொடுப்பனவு நாளேடு
   - இ) விற்பனை நாளேடு
   - ஈ) கொள்வனவு நாளேடு
2. பொதுப்பேரேட்டில் பின்வரும் பேரேட்டுக்கணக்குகள்
   - அ) விற்பனைகக் கணக்கு
   - ஆ) கொள்வனவுக் கணக்கு
   - இ) கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - ஈ) கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு
   - உ) காசுக்கட்டுப்பாட்டு கணக்கு
   - ஊ) VAT கட்டுப்பாட்டு கணக்கு (25 புள்ளிகள்)

ஆ) தியாகிகள் விளையாட்டுக் கழகத்தில் வருடாந்தம் ரூ 500 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 100 சாதாரண அங்கத்தவாகளும் 20 ஆயுள் அங்கத்தவர்களும் உள்ளனர். 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.

காசுப்பெறுவனவுகள்	ரூபா	காசுப்கொடுப்பனவுகள்	
பெற்ற சந்தா 2020/2021	2500	மின்சாரம்	6000
2021/2022	40000	எழுதுபொருள்	3000
2022/2023	5000	விளையாட்டுப்போட்டிச் செலவு	2000
விளையாட்டு உபகரண நிதி	50000	விளையாட்டு உபகரணம் கொள்வனவு	80000
நுழைவுக்கட்டனம்	4000	பத்திரிகை கொள்வனவு	6000
பழையபத்திரிகை விற்பனை	2000	பந்தும் சீருடையும்	5000

மேலதிக தகவல்கள்

1) *1.4.2021 இல் உள்ள காசு மிதி ரூ 75000 விளையாட்டு உபகரணம் ரூ 100 000 ஆயுள் அங்கத்தவ சந்தா ரூ 34000 முற்பன சந்தா 2000 விளையாட்டு உபகரண நிதி ரூ 75000*
2) *ஆள்அங்கத்தவ சந்தா 20 வருட சமபரப்பில் பதிவளிக்கப்படும் ஆயுள் அங்கத்தவர்கள் 1.4.2018 இல் இணைந்து கொண்வர்கள்*
3) *செலுத்தப்பட்ட மின்சாரத்தில் ரூ 1000 சென்றாண்டுக்கும் ரூ 2000 அடுத்தாண்டுக்குரியதுமாகும்.*
4) *31.3.2022 இல் உள்ள விளையாட்டு உபகரணம் ரூ 172000*
5) *2020/2021 ம் ஆண்டுக்குரிய சந்தாவை செலுத்தாது 5 அங்கத்தவர் இவ்வருட ஆரம்பத்தில் கழகத்தைவிட்டு வெளியேறினர். ஆவர்களது சந்தா ஆண்டுகாலத்தில் அறிடமுடியா சந்தாவாக பதிவளிக்கப்பட்டதுடன் அங்கத்தவமும் இரத்துச் செய்யப்பட்டது.*
6) இவ்வாண்டு கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணம் முழுவதும் விளையாட்டு உபகரண நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. பயன்படுத்திய விளையாட்டு உபகரண நிதியை வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கையாகும்.

தயாரிக்குக.

1) 31.3.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கூற்று

2) 31/3/2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சந்தாக் கணக்கு

(15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)